**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2018 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 24 ஆகஸ்ட் 2018 இல் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 9,620,059 பெறுமதியான 14 மூலதன வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் மீளாய்வாண்டில் நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமையால் சபையின் நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 171,400 பெறுமதியான 03 கொடுக்கல் வாங்கல்கள் கடந்த 1 தொடக்கம் 6 வருடங்களாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

ரூபா 468,700 கூட்டு மொத்தமான மோட்டார் கிரேடர் மற்றும் உருளை வாடகை வருமானத்திற்குரிய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பதிவேடுகள் கிடைக்கப்பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பாகம் III இன் பிரிவு 24 | | பிரதேசசபை ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் பிரதேச சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | | |
| (i) | அத்தியாயம் III இன் விதி 66 | 5,412,332 | அரசிறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த 07 அரசிறைகளினை உரிய காலப்பகுதியில் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அத்தியாயம் V இன் விதி 140 | 4,539,848 | 11 முற்பணங்கள் கடந்த 01 தொடக்கம் 02 வருடங்களாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்தியாயம் IX இன் விதி 180 | | சபையினால் காசு மற்றும் களஞ்சிய பொருட்களுக்கு பொறுப்பாக உள்ள 07 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | அத்தியாயம் XXIV இன் பிரிவு 4 | 154,000 | பதவியில் இருந்து வறிதாக்கப்பட்ட 02 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடர் கடன்களின் நிலுவைகளினை கடந்த 01 தொடக்கம் 03 வருடங்களாக அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் நிதி ஒழுங்கு விதி 571 | 4,366,633 | 47 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக கடந்த 01 தொடக்கம் 02 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 9,312,671 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 16,471,037 தொகையாக இருந்தது.

### 2.2. வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | - | - | - | | - | - | - | |
| (ii) | வாடகைகள் | 4,101,356 | - | 4,193,279 | 184,970 | 6,256,696 | - | 4,128,681 | 170,956 |
| (iii) | உரிமங்கள் | 338,750 | - | 407,636 | 3,200 | 300,500 | - | 368,910 | 500 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 8,982,100 | - | 18,036,372 | 5,224,161 | 5,566,500 | - | 11,943,913 | 4,679,428 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு உடமையாக்கப்பட்டிராத 15 வாகனங்கள் கடந்த 01 தொடக்கம் 09 வருடங்களுக்கு மேலாக சபையினால் பயன்படுத்தப்பட்டுவந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 1,060,000 பெறுமதியான 05 வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

#### (i) பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட 64 பதவியினர்களில் 53 ஆளணியினர்கள் உள்ளனர். இதன் காரணமாக 11 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டிய வேலைகள் பாதிப்படைந்திருந்தது.

#### (ii) ஊழியர் கடன்கள்

பதவியில் இருந்து வறிதாக்கப்பட்ட 02 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 154,000 தொகையான இடர் கடன் நிலுவைகளினை 01 தொடக்கம் 03 வருடங்களாக அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 10,053,439 பெறுமதியான 12 மூலதன வேலைத்திட்டங்களை நிறைவேற்றப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை வங்கியில் நடைமுறைக்கணக்கொன்றில் ரூபா 17,853 நிதியானது கடந்த 8 வருடங்களாக செயற்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) சபையின் வீதி புனரமைப்பு வேலைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 11,722 பெறுமதியான தார் பரல்கள் 04 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டிராது களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 68,886 தொடக்கம் ரூபா 8,252,096 அல்லது 16.9 சதவீதம் தொடக்கம் 59.7 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன. மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம், என்பவற்றுக்கிடையே ரூபா 10,050 தொடக்கம் ரூபா 5,775,921 அல்லது 12.3 சதவீதம் தொடக்கம் 23.8 வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்படடன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணத் தவறியமை |
| (ஆ) | அரசிறை நிலுவைகளின் அறவீடு | அரசிறை நிலுவை வயதுப் பகுப்பாய்வினை தயாரிப்பதற்கு தவறியமை |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | வெற்றிடமாயுள்ள பதவியணிக்கு உரியவாறு ஆட்சேர்ப்பு செய்யத் தவறியமை. |